# அடையாளம்

மட்டக்களப்பு, எல்லை வீதி,

ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலய

மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் – 2012



வெளியீடு

ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலய

பரிபாலன சபை,

எல்லை வீதி, மட்டக்களப்பு.

நூலகம் . 049
19.01.13

# அடையாளம்

## மட்டக்களப்பு, எல்லை வீதி,
## ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலய

### மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் – 2012



வெளியீடு
ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலய
பரிபாலன சபை,
எல்லை வீதி, மட்டக்களப்பு.

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அடையாளம் |
| | | ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2012 |
| வெளியீடு | : | ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆலய பரிபாலன சபை, எல்லை வீதி, மட்டக்களப்பு. |
| பதிப்பு | : | ஆனி 2012 |
| அட்டை வடிவமைப்பு, கணினி வடிவமைப்பு | : | சுபாஜெனி சங்கர் |
| தொகுப்பாசிரியர் | : | து. கௌரீஸ்வரன் |
| அச்சுப் பதிப்பு | : | வணசிங்கா பிரிண்டர்ஸ். மட்டக்களப்பு. |

## ஆலய பூசகரின் ஆசியுரை

மட்டக்களப்பின் நகர்ப் பகுதியிலே பாரம்பரிய சடங்கு முறையினை அதன் தனித்துவத்துடன் முன்னெடுத்து வரும் கோவில்களுள் ஒன்றாக எமது ஆலயம் விளங்கி வருகின்றது. 1935 களில் பிரதான ஆலயம் ஆகம முறையில் அமைக்கப்பட்டாலும் சடங்கு முறையினையும் அதற்கு அடிப்படையான பாரம்பரிய பூசகர் முறையினையும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் இவ்வாலயச் சமூகத்தினர் உறுதியாகவே இருந்து வருகின்றார்கள்.

எமது முன்னோர்கள் அமைத்த ஆலயம் பழுதடைந்த சூழலில் புதிய ஆலயத்தை அமைக்கும் திருப்பணி வேலைகள் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2012 இல் நிறைவடைந்து தற்போது புதிய ஆலயத்தில் எம்பெருமானைக் குடிகொள்ளச் செய்யும் பெருவிழா நடைபெறும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு காரியங்களும் எமது முன்னோர்களால் காரணம் கருதி உருவாக்கப்பட்ட நடைமுறை களாகவே இருந்து வருகின்றன. இதற்கிணங்க இனிவரும் தலைமுறை யினரும் இந்த நடைமுறைகளைச் சரியாக விளங்கி சடங்குப் பாரம்பரியத்தைத் தொடர்வதற்குரிய அறிவினை இத்தொகுப்பு வழங்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

இந்த நல்ல முயற்சிக்கு ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமியின் பேரருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறையன்புடன்

**செ. தயாநிதி,**

பிரதம பூசகர்,

ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலயம்,

மட்டக்களப்பு.

ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆரயத்தின் வரலாற்றலே இடம்பெறும் ஐந்தாவது மகா கும்பாவிஷேகம் இந்த வருடம் எமது நிருவாக சபையின் பொறுப்பில் இடம்பெற்றுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடை கின்றோம்.

இந்தப் பெரும் இறை பணியை முன்னின்று நடத்த எமக்கு திருவருள் புரிந்த நரசிங்க வயிரவ சுவாமிக்கு அவர் திருவடி தொழுது எமது நன்றிகளை நாம் செலுத்துகின்றோம். இனி எம்கடன் அவர் பணி செய்து கிடப்பதே எனத் திடம் கொண்டுள்ளோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆந் திகதி புதிய மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு மூன்று வருட நிறைவில் மகா கும்பாபிஷேகம் நடப்பதற்கு முழுமுதற் காரணமாக நரசிங்க வயிரவ சுவாமியே இருந்துள்ளார்.அவர் சித்தப்படியே அனைத்து காரியங்களும் இடம்பெற்றுள்ளன.

நரசிங்க வயிரவராகிய காரண கர்த்தாவின் காரியத்தை முன்னெடுத்த கருவிகளாகவே எமது நிருவாகம் கடந்த மூன்றரை வருடங்களாகச் செயற்பட்டு வந்துள்ளது.

இப்பெரும் பணியை நிறைவேற்ற நரசிங்க வயிரவரின் பக்தர்கள் வழங்கிய ஆதரவுகளே அடிப்படையாக இருந்துள்ளன. பணமாகவும், பொருளாகவும் பலரும் முன்வந்து உதவிகள் புரிந்து இப்பணியைச் செம்மையாகச் செய்யப் பங்களித்துள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலத்த சவால்களுக்கு மத்தியில் புதிய மூலஸ்தானத்தை கட்டித்தரும் பொறுப்பினை ஏற்று உரிய முறையில் அதனை நிறைவேற்றித் தந்த மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த ஸ்தபதி

திரு.க.ரமேஸ்குமாருக்கும் அவரது குழுவினருக்கும் எமது நன்றிகள்,திரு ரமேஸ்குமார் அவர்களின் இணைப்பில் வந்து சிற்பங்களை அமைத்துத் தந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு.ராஜாராம் குழுவினருக்கும், வர்ணங்களைப் பூசித்தந்த ஓவியர் திரு.ஸ்ரீ.சஞ்ஜிவ் குழுவினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கும்பாவிஷேகக் கிரியைகளை உரிய முறையில் நடத்தி வைத்த அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் பேராலய பிரதம குரு சிவப்பிரம்ம ஸ்ரீ இரங்க வரதராஜ சிவாச்சாரியார் அவர்களுக்கும் அவருடன் வந்த ஏனைய குருவினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இப்பெரும் பணியில் எமது நிருவாகத்திற்கு பக்க பலமாக நின்றுழைத்த அனைத்து அன்பர்களுக்கும் எமது நன்றிகள் பல உரித்தாகட்டும்.

அனைவருக்கும் ஸ்ரீ மகா நரசிங்க வயிரவரின் அருள் கிடைப்பதாக...
ஓம் சாந்தி...சாந்தி...சாந்தி...

இவ்வண்ணம்
இறைபணியிலுள்ள,

| | | |
|---|---|---|
| **சீ.நவநேசராசா,** | **க. கலாமோகன்,** | **து.கௌரீஸ்வரன்** |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |


மண்டலாபிஷேக பூசையின் போது ...

# தொகுப்பாசிரியரின் குறிப்பு

கிழக்கிலே இருக்கின்ற வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங்களுள் ஒன்றாக ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆலயம் அமைந்துள்ளது. இவ் வாலயத்தின் வரலாற்றிலே 1899, 1935, 1968, 1991 ஆகிய வருடங்க ளில் மகா கும்பாவிஷேகங்கள் இடம்பெற்றுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

1899 ஆம் ஆண்டு இப்போது இருக்கின்ற ஆலயத்திற்கான ஆரம்பக் கட்டம் இடப்பட்டுள்ளது.இதையடுத்து ஒவ்வொரு கட்டங்களிலும் கட்டிட வேலைகள் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த வரலாற்றின் தொடர்ச்சியாக பழுதடைந்து காணப்பட்ட மூலஸ்தானத்தை புனருத்தாரணம் செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னாள் தலைவர் திரு.க.சக்திதாஸ் அவர்களின் தலைமையிலான நிருவாகத்தினால் 2007,2008 ஆகிய காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.இச்சூழலில் துரதிஸ்டவசமாக நிருவாக சபைத் தலைவர் நிருவாகக் கடமைகளைச் செய்யமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டபோது 28.12.2008 இல் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்பட்டு புதிய தலைவராக திரு.சீ.நவநேசராசா அவர்களும்,புதிய பொருளாளராக திரு.க.கலாமோகன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு 2009 ஆம் ஆண்டு மூலஸ்தானத்தை முற்றிலும் புதிதாக அமைப்பதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தவகையில் பழைய அத்திவாரம் அகற்றப்பட்டு புதிதாக ஐந்து அடி ஆழத்தில் உறுதியான அத்திவாரம் போடப்பட்டு இரண்டு தளங் களைக் கொண்ட விமானத்துடன் கூடிய மூலஸ்தானம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.தொடர்ச்சியாக 2010,2011 ஆகிய வருடங்களில் தொடர்ந்த இத்திருப்பணி வேலைகள் இவ்வாண்டு நிறைவடைந்து 2012.06.02 ஆந் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து 23 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 26.06.2012 ஆந் திகதி சங்காபிஷேகத்துடன் இனிதே நிறைவு பெறுகின்றது.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் முதல் தடவையாக கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என்று ஆலய

நிருவாக சபை தீர்மானித்தது,பொதுச்சபையின் அனுமதியுடன் இந்நூலைத் தொகுக்கும் பணி செயலாளர் என்ற வகையில் என்னிடம் தரப்பட்டது. இந்நூலின் பிரதான அம்சமாக ஆலயத்தின் வரலாறும், சிறப்புக்களும், தனித்துவங்களும் வெளிவர வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க ஆலயத்தின் வரலாறு சம்பந்தமாகவும், தனித்துவங்கள் சம்பந்தமாகவும் கூறப்பட்டு வரும் செவி வழிக் கதைகளையும் மற்றும் இவ்வாலயம் சம்பந்தமாக வெளிவந்துள்ள சில கட்டுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு அடையாளம் எனும் நாமத்தில் இச்சிறு நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

எமது ஆலயத்தின் வரலாற்றில் முக்கியம் பெற்ற பெயராக அடையாளம் என்ற சொல் விளங்குகின்றது.இவ்வாலயத்தின் முகவரியாக கந்தன் கதிராமரும் அவர் கொண்டு வந்த அடையாளமுமே அமைகின்றன. அடையாளச் சடங்கே இவ்வாலயத்தின் விசேட விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. எனவே இவ்வாலயத்தின் வரலாறு கூறும் இத்தொகுப்பிற்கும் அடையாளம் எனப் பெயர் வைத்துள்ளோம்.

இவ்வாலயத்தின் வரலாற்றினையும் சிறப்புக்களையும் தனித்துவங்களையும் பூரணமாக தொகுக்கும் பெரும் பணியின் முதல் அடியெடுப்பாகவே அடையாளம் எனும் இத்தொகுப்பு அமைகின்றது. இன்னும் பல விடயங்கள் சேர்க்கப்பட வேண்டியிருக்கலாம்.எனவே அத்தகைய விடயங்களைத் தெரிந்தவர்கள் ஆக்கபூர்வமாக இதன் அடுத்த கட்ட பூரணத்துவத்திற்கு உதவ முன்வர வேண்டும்.

இன்று எமது அறிவுத்துறையிலே பாரம்பரிய வாழ்வியல் முறைகளையும், பாரம்பரிய அறிவு முறைமைகளையும் மீளவும் பயன்பாட்டிற்கு உரிய வகையில் கொண்டு வரும் எத்தனங்கள் இடப்பட்டு வருகின்றன.இதன் ஓர் அம்சமாக சமூக அசைவியக்கத்தின் மையமாகவுள்ள சடங்குக் கோவில்கள் பற்றியும், அவற்றின் வரலாறுகள், தனித்துவங்கள் குறித்தும் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

இச்சூழலில் ஒரு சமூகத்தின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள இவ்வாலயத்தின் வரலாற்றையும், அதன் தனித்துவங்களையும் எழுத்தில் வெளிக்கொணர வேண்டியது காலத்தின் தேவையாகியுள்ளது. எனவே இதைக் கருத்திற் கொண்டு இத்தொகுப்பு நூல் முதல் வரைவாக வெளிவருகின்றது.

இந்த ஆலயத்தின் வளர்ச்சியிலும்,முன்னேற்றத்திலும் ஆரம்ப காலந் தொடங்கி இன்றுவரை தமது உழைப்பினை வழங்கி வந்துள்ள நிருவாக சபைத் தலைவர்கள், பொருளாளர்கள், செயலாளர்கள். நிருவாக உறுப்பினர்கள், தெய்வக்காரர்கள், பூசகர்கள், தொண்டர்கள், பக்தர்கள் எனச் சகலரையும் நன்றியுடன் நாம் நினைவுபடுத்திக் கொள்கின்றோம். அவர்கள் அமைத்துத் தந்த பாதையே எமது பயணத்திற்கு உதவி யுள்ளதை நன்றியுடன் கூறிக்கொள்கின்றோம்.

இச்சிறு நூலின் உருவாக்கத்திற்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் இதன் தொகுப்பாளர் என்ற வகையில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


இவ்வண்ணம்
**து. கௌரீஸ்வரன்,**
செயலாளர்,
ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலய பரிபாலன சபை,
எல்லை வீதி, மட்டக்களப்பு.
26.06.2012.



புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் தோற்றம்

# ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலயம், எல்லை வீதி, மட்டக்களப்பு.

**ஆலய வரலாறும், தனித்துவங்களும் – ஒரு சுருக்கக் குறிப்பு :**



அறிமுகம் :


இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற இந்துசமய மக்களின் பண்பாட்டிலே சடங்குக் கோவில்களும், இக் கோவில்களில் வருடத்திற்கு ஒருமுறை இடம்பெறும் சடங்குகளும் பெருந்தாக்கம் செலுத்தி வருவதனைக் காண்கின்றோம். இச் சடங்கு முறைகளின் தாய்க் கோவில்களாக சில கோவில்கள் கிழக்கிலே இருக்கின்றன.

இவ்விதமுள்ள சடங்குக் கோவில்களுள் நரசிங்க வயிரவர் வழிபாட்டின் மூலக் கோவிலாகவே மட்டக்களப்பு எல்லை வீதியில் இருக்கின்ற ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி கோவில் உள்ளது.

இக்கோவிலின் வரலாறு குறித்த ஒரு சமூகத்தின் வரலாற்றுடன் சம்மத்தப்பட்டதாக இருக்கின்றது. அதாவது மட்டக்களப்பிலே வாழ்கின்ற இந்து சமயத்தைச் சேர்ந்த ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒவ்வொரு குல தெய்வங்கள் இருப்பதனை அறிவோம். இந்த வகையில் நரசிங்கத்தை குல தெய்வமாகக் கொண்டு வாழும் நம்பி குல மக்களின் வரலாற்றுடன் சம்பந்தப் பட்டதாக இவ்வாலயத்தின் வரலாறு அமைந்துள்ளது.

காலனித்துவத்திற்கு முந்திய சமூக அமைப்பிலே இருந்து வந்த ஆட்சியாளர்களின் மெய்ப் பாதுகாப்பிற்கான பொறுப்பினை நம்பி குலத்தவர் களே கடமையாகச் செய்து வந்தார்கள் என்றும், உடற் பலமும், தைரியமும், வீரமும் இவர்களின் இன்றியமையாத இயல்புகளாக இருந்தன என்றும், அக்காலத்து போர்க் கருவியான வில்லும் அம்பும்

இவர்களுக்கான குலத்தின் அடையாளமாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.



இவ்வாறு பண்டைய அரசர்களின் பாதுகாப்புக் கவசமாக விளங்கிய நம்பி குலத்தவரின் வாழ்வு காலனித்துவ ஆக்கிரமிப்பின் பின்னர் ஏற்பட்ட பண்டய அரசர்களின் அழிவைத் தொடர்ந்து சிதைவடைந்ததாகக் கூறப்படுகின்றது.இச்சிதைவின் முக்கியம்சமாக தொழில் மாற்றங்களும், இடப்பெயர்வுகளும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.இவ்விதம் இலங்கையின் வடக்கிலிருந்து காலனித்துவ ஆக்கிரமிப்பின் பின்னர் இடம்பெயர்ந்த நம்பி குலத்தவர்களின் வரலாற்றுடன் எல்லை வீதி ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆலயத்தின் வரலாறும் அமைந்துள்ளது.

**ஆலய வரலாறு கூறும் கதை :**

1845 ஆம் ஆண்டளவில் கந்தன் கதிராமர் என்பவர் வன்னி நாட்டின் ஒரு பகுதியிலிருந்து நரசிங்க வயிரவரின் அடையாளத்துடன் மட்டக்களப்பிற்கு வந்து மட்டக்களப்பின் பண்டய நீர் வழிப் போக்குவரத்தின் முக்கிய இறங்கு துறையாக விளங்கிய பெருந்துறையில் (இப்போது திருப்பெருந்துறை எனப்படும் இடம்) இறங்கி அதன் ஒரு பகுதியாகவுள்ள விடத்தல் முனை எனும் இடத்தில் சிறிது காலம் வாழ்ந்துள்ளார் இக்காலத்தில் குறித்த விடத்தல் முனையில் ஒரு மர நிழலில் தான் கொண்டு வந்த நரசிங்க வயிரவரின் அடையாளத்தை வைத்து வணங்கி வந்தார்.

பின்னர் தனது தேவைகளின் பொருட்டு தனது சந்ததியார் வாழ்ந்து வந்த கோட்டைமுனையை (தற்போது மட்டக்களப்பு பொதுச் சந்தையை அடுத்துள்ள அரசடிப் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த பகுதி) வந்தடைந்து தனது சமுகத்தவருடன் இணைந்து வாழ்ந்தார்.தனது சமூகத்தவர் அதிகமாக வாழும் இப்பகுதியிலேயே தனது குல தெய்வத்திற்கான கோயிலையும் அமைத்துக் கொள்ள விரும்பினார். இதன்படி இங்கு வாழ்ந்த

வயிரவியார் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில்(தற்போது ஆறாம் வட்டார கனிஷ்ட வித்தியாலயம் உள்ள காணி) கூழாமரத்தடியில் மேடையமைத்து அதில் தான் கொணர்ந்த நரசிங்க வயிரவரின் அடையாளத்தை வைத்து தனது சமூகத்தவர்களுடன் சேர்ந்து வழிபட்டு வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வந்த சிறிது காலத்தின் பின் ஒரு நாள் அழ்ந்த உறக்கத்திலிருந்த கந்தன் கதிராமர் அவர்கள் ஆவேசம் வந்தவர் போல் எழுந்து அலறிக்கொண்டு ஓடத்தொடங்கனார். எதிர்பாராத இந்நிகழ்வைக் கண்ட அவரது உறவினரும், ஊரவரும் அவர் பின்னால் ஓடினர். யாரை யுமே கவனியாது கோட்டைமுனையின் வடக்குப் புறமாக காடுகளுக்கூடாக தெய்வ உருக்கொண்டவராக ஓடிய கந்தன் கதிராமர் இப்போது ஆலயம் உள்ள இடம் வரைக்கும் ஓடி வந்தார்.வந்தவர் இங்கிருந்த பெரியதொரு தேற்றா மரத்தைச் சுற்றிச் சுற்றி ஆடிக் கெண்டிருந்தார், அப்போது இவர் பின்னால் வந்த உறவினர்கள் அவரை நோக்கி விசாரித்தனர் அதைக் கேட்ட கந்தன் கதிராமர் தெய்வக் கலையேறிய நிலையில் தனது சமூகத் தவர்களைப் பார்த்து இன்று முதல் நரசிங்க வயிரவ சுவாமி இந்தத் தேற்றா மரத்தடியில் குடியிருக்க சித்தமாகியுள்ளார் நீங்கள் மேடைய மைத்து ஆக வேண்டியதைச் செய்து தர வேண்டும் எனக் கேட்டார்.அங்கு நின்றவர்கள் தாரை வார்த்து சத்தியம் செய்ததன் பின்னரே கந்தன் கதிராமர் கலையேற்றம் நீங்கப் பெற்றார்.

கந்தன் கதிராமர் ஊடாக வந்த நரசிங்க வயிரவருக்கு கொடுத்த சத்தியத்திற்கிணங்க கந்தன் கதிராமரின் உறவினர்களும்,சந்ததியினரும் தேற்றா மரத்தடியில் சிறு கோவிலமைத்து வருடா வருடம் இவ்விடம் வந்து தங்கி நின்று சடங்கு நடத்தி தமது கடமைகளைச் செய்து வந்தனர். இக்காலத்தில் இவ்வாலய சடங்கு நிகழ்விற்கான அடிப்படை ஒழுங்கு முறைமைகள் உருவாக்கப்பட்டன. கந்தன் கதிராமரால் ஆக்கப் பட்ட மந்திரங்கள், விருத்தப் பாக்கள்,காவியங்கள் என்பனவும், கிரியை முறைகளும் இவ்வாலயச் சடங்கு முறையின் அடிப்படையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறிது காலத்தின் பின்னர் கந்தன் கதிராமரின் உறவினரான சின்னவியார் என்பவர் தேற்றா மர நிழலில் குடி கொண்ட நரசிங்க வயிரவருக்கு ஒவ்வொரு நாளும் தொண்டுகள் செய்யும் பொருட்டு கோவிலுக்கு அருகிலேயே சிறு குடிசையமைத்து வாழத் தொடங்கினார். இந்நிலையில் ஒரு நாள் திடீரென சின்னவியாருக்கு பெரியம்மை நோய் வந்தது. அம்மை நோயைக் கண்டு பயந்த உறவினர்கள் சின்னவியாரை நெருங்காது விலகிச் சென்றார்கள். உறவினரால் கைவிடப்பட்ட நிலையில் தன்னந் தனியனாக நரசிங்க வயிரவரையும், முத்து மாரி அம்மனையும் வேண்டித் துதித்தபடி வாழ்ந்தார், சிறிது நாட்களின் பின்னர் இறையருளால் அம்மை நோய் நீங்கினாலும் அவரது கண்களிரண்டும் பார்வையிழந்து விட்டன. அம்மை நோய் நீங்கி பார்வை இழந்தவராக சின்னவியார் உள்ளதை அறிந்த அவருடைய உறவினர் வந்து பார்த்தனர், விசாரித்த னர். அப்போது தாம் நோயினால் அனுபவித்த கஸ்டங்களையும், வேதனை களையும் கூறியதுடன், அந்நாட்களில் இந்நோய் நீங்கவும்,தமது சந்ததி யினருக்கு வராதிருக்கவும் முத்து மாரி அம்மனையும், நரசிங்க வயிரவரை யும் நினைத்து தான் பாடிய பாடல்களைப் பாடிக்காட்டினார்.

தங்களால் கைவிடப்பட்ட நிலையிலும் கூட தமக்காகவும்,தமது சந்ததியினரின் நல் வாழ்வுக்காகவும் நெஞ்சுருக்கும் பாடல்களைப் பாடி இறையருள் பெற்றுள்ள சின்னவியாரின் பெருங்கருணையினை உணர்ந்து அவரைப் பணிந்த உறவினர்கள் சின்னவியாரின் ஆசியுடன் அப்பாடல்க ளைத் தொகுத்துக் கொண்டார்கள். இதன்போதே முத்துமாரி அம்மனுக்கு கோவிலமைத்து சின்னவியார் பாடியுள்ள மாரியம்மன் குளுர்த்திப் பாடல் களைப் பாடி நடத்தும் மாரியம்மன் சடங்கு முறை உருவாக்கப்பட்டது.


சின்னவியார் நரசிங்க வயிரவர் மீது பாடிய பாடல்கள் வயிரவர் ஊஞ்சல் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.சின்னவியார் உயிருடன் இருக்கும் வரை அவருடைய வழிப்படுத்தலிலேயே ஆலய நடவடிக்கைகள் யாவும் இடம்பெற்று வந்துள்ளன, சின்னவியார் காலமானதன் பின் கோட்டைமுனை, உப்போடை, சீலாமுனை, அமிர்தகழி, ஏறாவூர், முறக்கொட்டான்சேனை, நாவற்குடா, மாங்காடு ஆகிய ஊர்களில் குடியேறி வாழ்ந்த நம்பிகுலத்தின் வழி வந்தோர் எல்லோரும் ஒன்றிணைந்து ஆலய பரிபாலனத்திற்காக வண்ணக்குமாரைத் தெரிவு

செய்துள்ளனர் இத்துடன் நரசிங்க வயிரவருக்கு நிலையான ஆலயம் ஒன்றமைக்க வேண்டுமெனவும் எண்ணினர் இதற்கிணங்க ஆலயம் உள்ள நிலத்தை அரசினரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானித்தனர்.

17.11.1866 இல் ஆலயம் உள்ள நிலத்தை வயிரவியார் நாகப்பர், வினாயகர் வேலாயுதர் ஆகியோர் ஒன்றிணைந்து பணம் கொடுத்து வாங்கினர். இதன் பின்பு தேற்றாமர நிழலில் நரசிங்க வயிரவருக்குரிய ஆலயமும், அதன் வலப் பக்கத்தில் மாரியம்மனுக்குரிய ஆலயமும் சிறு குடில்களாக அமைத்து வழிபட்டு வந்தனர், தொடர்ந்து 33 வருடங்க ளாக மேற்படி ஆலயத்திலேயே வழிபாடுகள் இடம்பெற்று வந்த சூழலில் 1899 ஆம் ஆண்டு திடீரெனத் தேற்றா மரம் தீப்பற்றி எரிந்துவிடவே நாகப்பர் இளையபெருமாள், வேலாயுதர் சபாபதி ஆகிய வண்ணக்கர்களின் பொறுப்பில் நம்பி குல மக்களின் உதவிகளுடன் இப்போதிருக்கின்ற ஆலயத்தின் முதலாவது கட்டிடம் கட்டப்பட்டது. அதாவது நரசிங்க வயிரவ ருக்கு பெரிய கோவிலும் வலப்பக்கத்தில் மாரியம்மனுக்குரிய கோவிலும் கட்டப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட கோவிலில் முறைப்படி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு முதலாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற் றுள்ளது. அதன் பின்னர் 1935ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகமும், 1968 ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகமும், 1991 ஆம் ஆண்டு நான்காவது கும்பாபிஷேகமும், தற்போது 2012.06.02 ஆம் திகதி ஐந்தாவது கும்பாவிஷேகமும் இடம்பெற்றுள்ளன.

1964 ஆம் ஆண்டு வரை மக்கள் நியமித்த வண்ணக்குமாரின் பொறுப் பிலேயே ஆலய நிருவாகம் இருந்து வந்துள்ளது. இதன் பின்பே நிருவாக சபை முறை மைக்கு மாற்றப்பட்டுள்ளது.





ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் ஆனி உத்தரத்தை மையமாகக் கொண்டு ஒரு வெள்ளிக் கிழமை ஆரம்பித்து அடுத்த வெள்ளிக்கிழமை நிறைவு செய்யும் வகையில் வருடாந்தச் சடங்கு விழா நடாத்தப்பட்டு வந்துள்ளது. இது தவிர தைப்பொங்கல், மகா சிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு, கார்த்திகை தீபம், மார்கழிப் பிறப்பு ஆகிய தினங்களில் விசேட சடங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. வருடாந்தச் சடங்கிலும் மேற்படி விசேட தினச் சடங்குகளிலும் மாத்திரமே பெரிய கோவில் கதவு திறக்கப்பட்டு தெய்வம் ஆடி சடங்கு நடத்தப்படுகின்றது. சிவராத்திரியன்று தெய்வம் ஆடாது பூசை மாத்திரம் நிகழ்த்தப்படும். கார்த்திகை விளக்கீடன்று பிரதமப் பூசகர் தெய்வ உருப்பெற்று சொக்கப்பனை வெட்டுவார். 1964 இல் இருந்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமை களிலும் மதியப் பூசை இடம்பெற்று வருகின்றது இப்பூசை பிள்ளையார், நாகதம்பிரான், மாரியம்மன், வெளி மண்டபத்திலுள்ள ஞமலி, பலிபீடம், வயிரவ அடையாளம் என்பவற்றிற்கு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

### வருடாந்தச் சடங்கும், சடங்கு உபயமும் :

வருடாந்தம் ஏழு தினங்கள் வருடாந்தச் சடங்கு விழா இடம்பெற்று வருகின்றது.இதில் முதல் ஆறு சடங்குகள் ஆரம்ப காலத்தில் சடங்குகளைப் பொறுப்பேற்று நடத்தியவர்களின் சந்ததியினரால் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றது. 7வது நாள் பொதுச்சடங்காக இடம்பெறுகின்றது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் சடங்கு உபயம் தந்தை வழி உறவு மூலம் தொடரப்படுவதாகும். மட்டக்களப்பில் பெரும்பாலும் தாய் வழி உறவு மூலமே உரிமைகள் வழங்கப்படும் நிலையில் நரசிங்க வயிரவ சுவாமி ஆலய சடங்கு உரிமை யில் தந்தை வழி உறவு முறை கடைப்பிடிக்கப்படுவதானது இச்சமூகத்தின் வரலாற்றினை தந்தை வழி உரிமையினைப் பேணும் வட இலங்கையுடன் தொடர்பு படுத்திப் பார்க்க உதவும் சான்றாகின்றது.

**பரம்பரைத் தெய்வக்காரர் பாரம்பரியம் :**

இவ்வாலயத்தில் தெய்வக்காரர்களாக உள்ளவர்களுள் பெரும்பாலானோர் பரம்பரைத் தெய்வக்காரர்களாக இருக்கின்றமை விசேட அம்சமாகும். இந்த வகையில் தெய்வக்காரராக உள்ளவர்கள் தமது பரம்பரைத் தெய்வத்திற்குச் செய்யும் தெய்வக் கடமையாகவும்,தமது மூதாதையருக்குச் செய்யும் பணியாகவும் கருதி இதனைச் செய்து வருகின்றார்கள்,

இது தவிர தமக்கு ஏற்பட்ட நோயினைத் தீர்ப்பதற்காக வந்து நோய் தீர்த்து பின்னர் சுகதேகியாக வாழ்வதற்கு கட்டாயம் தெய்வம் ஆட வேண்டும் என்ற அடிப்படையில் தெய்வம் ஆடுவோரும் இவ்வாலயத்தில் உள்ளார்கள்.

**தெய்வம் ஆடும் முறையின் தனித்துவம்**

மட்டக்களப்பில் உள்ள தெய்வம் ஆடும் முறைமைகளில் தனித்துவமும், வித்தியாசங்களும் கொண்டதாக இவ்வாலய தெய்வமாடல் முறை அமைந்துள்ளது. இங்கு தெய்வம் ஆடுதலை தலை சுற்றுதல் என விசேட பெயரில் அழைப்பர்.அதாவது தெய்வக்காரரில் கலையேறியதும் அவர் தலையைச் சுற்றி ஆடும் முறை இங்கு வழக்கத்தில் உள்ளதால் இப்பெயர் பெற்றுள்ளது என்கின்றனர்..

தெய்வக்காரர்களில் தலைமைத் தெய்வக்காரர் ஒருவர் இருப்பார், இவரைத் தலைக் கட்டாடி என அழைப்பர் ஆலய சடங்கு முறைகளை வழிப்படுத்தும் விதிகள் தெரிந்தவராக இத்தலைக்கட்டாடி விளங்குவார். ஓய்வுபெறும் நிலைக்கு வரும் தலைக்கட்டாடி மூப்பின் அடிப்படையிலும், உடல்வலு அடிப்படையிலும் அடுத்த தலைக்கட்டாடி யார் என்பதைத் தெரிவுசெய்வார் அவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைக் கட்டாடியிடம் தனக்கு முந்திய தலைக்கட்டாடி கூறிய இரகசிய உபதேசங்களை உரிய முறையில் உபதேசிப்பார் இவ்வாறு தலைக்கட்டாடியிடமிருந்து உபதேசம் பெற்றவரே அடுத்த தலைக்கட்டாடியாக ஆடும் தகுதி பெறுவார்.


இவ்வாறு தலைக் கட்டாடிகளுடாக கடத்தப்படும் இரகசிய உபதேசங்கள் இவ்வாலயத்தின் மூதாதையரான கந்தன் கதிராமர் அவர்களால் வழங்கப்பட்ட உபதேசம் எனக் கூறப்படுகின்றது.

இந்த உபதேசங்களை மையமாகக் கொண்டே சடங்குகாலக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ,இவ் உபதேசங்கள் சாதாரண நிலையில் ஞாபகத்திற்கு வருவதில்லை எனவும் தெய்வ உருப்பெறும் போதே ஞாபகத்திற்கு வருவதாகவும் கூறப்படுகின்றது.தலைக் கட்டாடிக்கென சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தெய்வம் ஆடும் தெய்வக்காரர் கட்டும் கொடுக்கு எனும் உடைய லங்காரம் தனித்துவமுள்ளதாக இருக்கின்றது.சாதாரணமான கொடுக்கா கவன்றி வித்தியாசமான அலங்காரங்கள், மடிப்புக்கள் கொண்டதாக இக்கொடுக்கை கட்டும் முறை அமைந்துள்ளது. தெய்வக்காரர் கொடுக்கை கட்டுவதற்கென குறித்த நேரம் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கொடுக்கை கட்டிய பின்னர் ஆலய தீர்த்தக் கிணற்றில் தலையில் நீரை ஊற்றியதும் தலைத் தெய்வத்தின் பின்னால் ஒருவர் பின் ஒருவராக தெய்வக்காரர் நடந்து வந்து பெரிய கோவிலைப் பார்த்து வணங்கிவிட்டு மாரியம்மன் கோவிலின் மண்டபத்துள் சென்று வரிசையாக நிற்பர். தெய்வக்காரரின் வரிசை ஒழுங்கு அவர்கள் தெய்வம் ஆடத்தொடங்கிய காலத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் தலைமைப் பூசகர் தெய்வக்காரர் மீது தெய்வங்களை வரப்பண்ணும் கிரியைகளை ஒழுங்கு முறையில் மேற்கொள்வார். இரண்டாம் பூசகர் தலைமைப் பூசகருக்கு உதவுநராகவே செயற்படுவார். இங்கு தெய்வ உருக் கொடுக்கும் வேலையை தலைமைப் பூசகர் மாத்திரம் செய்வது குறிப்பிடத் தக்கது.


முகப்பு வாயிலில் உள்ள சிற்பம்

மாரியம்மன் கோவிலில் உரிய முறைப்படி

சடங்கு நடத்தப்படும் இதன்போது பெண் தெய்வங்களும் அதனோடி ணைந்த ஆண் தெய்வங்க ளும் தெய்வக்காரரில் முறப்பட்டு தலை சுற்றி ஆடுவர். பூசை முடிந்ததும் தெய்வக்காரர் தெய்வ உரு நீங்கப் பெறுவர் இதன்பின்னர் பெரிய கோவில் பூசைக்காக தெய்வக்காரர் அழைத்துச் செல்லப்படுவர். பெரிய கோவிலில் பூசை இடம்பெறும் போது நரசிங்க வயிரவர் உருக்கொண்டு தெய்வக் காரர்கள் ஆவேசமாக ஆடுவர்.

இதைத் தொடர்ந்து கொடிமரப் பந்தல்,வீரமா காளி, வீரபத்திரர், குமாரர், காள வயிரவர், திரிசூல வயிரவர், கெங்காதேவி, கன்னிமார், கிரகசாந்தி, மாறா, வதனமார், சிங்கநாத வயிரவர், ஐயனார், காத்தவராயர், ஞமலி, பலிபீடம், ஆதி வயிரவர் ஆகிய தெய்வங்களுக்கு பூசைகள் நடத்தப்படும் இதன்போது தெய்வக்காரர்களில் உரிய தெய்வங்கள் முறப்பட்டு பூசைகளை ஒப்புக் கொள்வர். இவ்வாறு பூசைகள் நிறைவடைந் ததும் ஆதிவயிரவர் முறப்பட்டு காவல் பண்ணல் இடம்பெறும்,அதையடுத்து மாரியம்மன் கன்னிமாருடன் வீதி வலம் வருதல் நிகழ்வு மேற்கொள்ளப் படும். இதன்பின்னர் ஒவ்வொரு தெய்வங்களும் முறப்பட்டு தத்தமது கூடாரங்களுக்குச் சென்று பூசை முடித்து பக்தர்களுக்கு கட்டுச் சொல்லும் காரியங்களில் ஈடுபடுவர்.

மாரியம்மன் கன்னிமாருடன் வீதியுலா வரும் நிகழ்வு மூன்றாம் சடங்கிலி ருந்து ஆரம்பமாகி காலைப் பூசைகளிலேயே இடம்பெறும். நிறைவு நாளன்று மாத்திரம் பகலில் நடைபெறும்.


**கதவு திறக்கும் முறை :**

இவ்வாலயத்தின் பெரிய கோவில் கதவு திறப்பதற்கு பல விதி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன அதாவது முதலில் வடக்கு வாசல் கதவு திறக்கும் நிகழ்வு இடம்பெறும். கதவு கழுவிச் சுத்தமாக்கப் பட்டதும் அதன் முன்னால் மடை வைக்கப்பட்டு தேங்காய் உடைத்து பூசை செய்யப் பட்டதைத் தொடர்ந்து பிரதம பூசகரால் 3 முறை கதவில் தட்டி கதவு திறக்கப்படும் இதன் பின்னர் ஏனைய கதவுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் திறக்கப்படும்.

**தவில் அடிக்கும் முறை :**

இக்கோவிலில் தவில் அடிக்கும் முறை தனித்துவமானது மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான சடங்குக் கோவில்களில் வள்ளுவர் குலத்தைச் சேர்ந்தோரே தவில் அடித்து வருகின்றமை வழமையானது, ஆனால் இக்கோவிலில் தவில் அடிக்கும் வேலையினை கோவில் தொண்டர் களே செய்து வருகின்றார்கள்.

இதற்கும் ஒரு வரலாற்றுக் காரணம் இருக்கின்றது அதாவது முற்காலத்தில் இங்கும் வள்ளுவர் குலத்தைச் சேர்ந்தோரே தவில் அடித்து வந்ததாகவும் ஒருமுறை சொர்ணாளி ஊதிக்கொண்டிருந்த மூப்பன் தெய்வங்களை உருவேற விடாது தாளத்தால் தடுத்துக் கொண்டிருந்த தாகவும் இத்தடுப்பினை தலைமைப் பூசகர் முறியடித்த போது மூப்பனின் வாயிலிருந்த சொர்ணாளி அவரது கட்டுப்பாட்டிலிருந்து விலகியதாகவும் அப்போது தலைமைத் தெய்வக்காரர் இனிமேல் இவ்வாலயத்தில் சொர்ணாளி இல்லாது தாளம் மாத்திரம் வாசித்தால் போதும் எனவும் கூறி தான் விரும்பும் தாளத்தை கோவிலைச் சேர்ந்த ஒருவரிடம் உபதேசித்ததாகவும் அத்தாளத்தை அடித்து தம்மை அழைத்தால் தாம் பூசைக்கு வருவதாகவும் திருவாக்குக் கூறியுள்ளார்.


மூலஸ்தானத்தில் உள்ள நரசிம்ம அவதார சிற்பம்

இதன் பின்னர் இக்கோவிலில் தவில் அடிக்கும் விதம் வித்தியாசமாக அமைந்து வந்துள்ளது. வள்ளுவர் சமூகத்தினர் நரசிங்க வயிரவருக்கு தவிலடிக்கும் விதத்திலிருந்து இவ்வாலயத்தில் தவிலடிக்கும் விதம் வேறுபடுவதனை அவதானிக்க முடியும்.

இவ்வாலயத்தைச் சேர்ந்த தவில் அடிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் பலர் உருவாகி தேர்ச்சி பெற்று சிறப்பாக தவிலடித்து வருகின்றார்கள். இங்கு

தவிலடிக்கும் விதம் இக்கோவிலுக்கேயுரிய தனித்துவமான முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**கழிப்புச் சடங்குகள்**

இவ்வாலயத்தின் வருடாந்தச் சடங்கு விழாவில் இடம்பெறும் குறிப்பிடத்தக்க மற்றோர் விடயம் நோய் தீர்க்கும் வகையில் நடத்தப்படும் கழிப்புச் சடங்குகளாகும்.அதாவது அசாதாரண குணவியல்புகள் கொண்டவர்களாக காணப்பட்டு மருத்துவ முறைகளால் நோய் தீர்க்கப் படாது வருகின்ற நோயாளர்களை இனங்கண்டு அவர்களது நோய்களைத் தீர்க்கும் வகையில் கழிப்புச் சடங்குகள் இவ்வாலயத்தில் ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்து பல நோயாளர்கள் வருகை தந்து தமது நோய்களைத் தீர்த்துச் சென்றுள் ளார்கள். இதில் வெவ்வேறு இனத்தவர்களும்,மதத்தவர்களும் அடங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.


சடங்குகளுடாக மேற்கொள்ளப்படும் சமூக உளவள ஆற்றுப்படுத்தல் சிகிச்சை முறைகளுள் முக்கியமானதாக இவ்வாலயத்தில் இடம்பெற்று வரும் கழிப்புச் சடங்குகள் உள்ளன என ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

**கொடிமரம் நிறுத்தும் சடங்கு :**

இவ்வாலய வருடாந்தச் சடங்கு விழாவின் சிறப்பு நிகழ்வுகளுள் ஒன்று இரண்டாம் சடங்கன்று பகல் நடைபெறும் கொடிமரம் நிறுத்தும் சடங்காகும், இக்கொடிமரம் நிறுத்தும் சடங்கிற்கும் ஒரு வரலாற்றுக் கதை சொல்லப்படுகின்றது.

அதாவது முன்னொரு காலத்தில் சாதி முரண்பாட்டில் பிற சாதியினைச் சேர்ந்தவர்கள் சிலர் பந்தயம் பண்ணி சடங்கு விழாவன்று தெய்வங்களை வரவிடாது மந்திர வித்தைகளால் தடுத்து நிறுத்தியபோது ஆலய பூசகர்கள் அவ்வித்தைகளை எதிர்த்து தமது மதி நுட்பத்தால்

தடைகளை வெட்டி தெய்வங்களை வரவழைத்த வெற்றியின் அடையாள மாகவே வெற்றிக் கம்பமாக இக்கொடி மரம் நிறுத்தப்படுகின்றது.



விமானத்தில் உள்ள சிற்பம்

இக்கொடி மரம் நிறுத்த முன் அனைவருக்கும் நெற்றியில் குங்குமம் பூசப்படுவதும் வரலாற்று வெற்றியினை நினைவுபடுத்தவேயாகும்.

கொடிமரம் நிறுத்தியதும் தலைக்கட்டாடிக்கு குலதெய்வம் முற்பட்டு தாளத்திற்கு ஆடித்திருப்தி கூறுவார். இது குலதெய்வம் தன்னை வணங்கும் குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வந்தமையை நன்றியுடனும், பெருமையுடனும் நினைவுபடுத்தும் சடங்காக பக்தி சிரத்தையுடன் நிகழ்த்தப்படுகின்றது.

**அடையாளச் சடங்கு :**

இவ்வாலயத்தில் நடத்தப்படும் விசேட சடங்குகளுள் ஒன்று மூன்றாம் நாளன்று முன்னிரவு வேளையில் நிகழ்த்தப்படும் அடையாளச்சடங்காகும். ஆரம்ப காலத்தில் கந்தன் கதிராமர் அவர்களுடாக நரசிங்க வயிரவர் இக்கோவிலுள்ள இடத்திற்கு வந்ததன் பின்னர் அவருடைய சந்ததியார் காடாக இருந்த இப்பகுதிக்கு வந்து சடங்கினை நடத்திய காலத்தில் தாம் கொண்டு வரும் சுவாமியின் அடையாளத்தை வெளி வீதியில் வைத்து அபிசேகம் செய்து பின்னர் தெய்வக்காரர்களுடாக தெய்வங்களை வரவழைத்து காவல்பண்ணி ஆலயத்தைச் சுற்றி வலம் வந்து பிரதான கோவிலுக்குள் கொண்டு சென்ற முறையே இன்றும் அடையாளச் சடங்காக நடத்தப்படுகின்றது.

அடையாளச் சடங்கின் போது மந்திர உச்சாடனங்கள் எதுவுமின்றி தவில் தாளத்திற்கு மட்டும் தெய்வக்காரர் மீது தெய்வங்கள் முற்படுவது விசேட

நிகழ்வாகும். இது கோட்டைமுனையிலிருந்து திடீரென கந்தன் கதிராமர் ஊடாக நரசிங்க வயிரவர் உருக்கொண்டு இவ்விடம் வந்ததன் தொடர்ச்சி யாகவே அமைந்து வருகின்றது.

கற்களால் நிரந்தரக் கோவில் கட்டி அடையாளங்கள் கோவிலி னுள்ளேயே வைக்கப்பட்டதன் பின்னர் மூன்றாம் நாளிலிருந்து இச்சடங்கு நடத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகின்றது. அடையாளச் சடங்கின் பின்னரேயே நிறைவான சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

## குமாரர், மாறா தெய்வச் சடங்குகள் :

இவ்வாலயத்தில் இடம்பெறும் பல்வேறு தெய்வச் சடங்குகளுள் ஒன்று குமாரர், மாறா தெய்வங்களுக்கான சடங்காகும். இச்சடங்கு புராதன வேடுவ சமூகத்தவரின் சடங்காகக் கொள்ளப்படுகின்றது. இச்சடங்கு இங்கு இடம்பெறுவதற்கான வரலாற்றுக் காரணம் உள்ளது.

அதாவது கந்தன் கதிராமர் அவர்களால் இவ்வாலயம் உள்ள இடம் கோவிலுக்கான இடமாக அடையாளம் காட்டப்பட்டபோது இப்பகுதி காடாக இருந்துள்ளதுடன் இப்பகுதியில் வேடுவர்களே வாழ்ந்துள்ளார்கள். இவ்வாலயத்திலிருந்து மிக அண்மையில் வேடுவர்களின் குமார தெய்வ வழிபாட்டிடம் இருந்துள்ளது. (தற்போது குமாரத்தன் முருகன் கோவிலாக உள்ளது)

ஒருநாள் அதிகாலையில் சடங்கு நடத்தப்பட்ட போது இச்சடங்கில் தனக்கும் இடம்கேட்டு குமாரர் இவ்வாலயம் வந்ததாகவும் இவரது வருகையை அறிந்த நரசிங்க வயிரவர் அவருக்கும் இடம் வழங்கியதா கவும், வருடாந்தச் சடங்கு விழாவில் அலயத்தின் முன்வாயிலில் நின்ற கொக்கட்டி மரத்தில் தேன் கொடுத்து இவரைத் திருப்தி செய்யுமாறு கூறியதாகவும் சொல்லப்படுகின்றது,இதன்பின்னர் வருடா வருடம் குமாரரும் மாறாவும் முற்பட்டு இவ்வாலயத்தில் வேட்டையாடி மகிழ்ந்து அடியவர்க ளுக்கு திருவாக்குக் கூறிச் செல்லும் மரபு உருவாகியுள்ளது. இச்சடங்கு இன்றுவரை தொடர்கின்றது.


கொக்கட்டி மரம் 1978 சூறாவளியில் அழிந்த பின்னர் வருடாந்தச் சடங்கு விழாவின் போது அவ்விடத்தில் கொக்கட்டி மரப்பந்தல் போட்டு இச்சடங்கு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வதனமார் சடங்கு :**

தானிய உற்பத்திப் பொருளாதார முறையில் கால்நடைகள் முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன இக்கால்நடைகளைக் காக்கும் தெய்வமே வதனமார் ஆகும். எனவே வாழ்வுக்கு ஆதாரமான உணவுக்கு வழி செய்யும் வதனமாரைத் திருப்தி செய்யும் சடங்கு இவ்வாலயத்தில் நடத்தப்படும் சிறப்பான சடங்குகளுள் ஒன்றாகும். சடங்கு நாட்களில் குளு வதனன், பால வதனன் முற்பட்டு மாடு பிடிக்கும் நிகழ்வு இங்கு இடம்பெற்று வருகின்றது.

சிங்கநாதருக்கான பலி பூசையின் போது அனைத்து தெய்வக்காரரும் கலையிறக்கம் செய்யப்படும் போது வதனமார் மட்டும் ஆலய வீதியில் காவல் செய்யும் வழக்கம் உண்டு. இதுவும் வரலாற்றுச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாகவே இருக்கின்றது.

அதாவது 1980 களின் பின்னர் ஆலயங்களில் பலி கொடுப்பதற்கு தடை வதிக்கப்பட்ட போது அதற்குக் கட்டுப்பட்டு ஆலய பூசகர், மற்றும் பெரும்பான்மையான நிருவாகிகள் பலி கொடுக்கத் தயங்கியபோது உரிய நேரத்தில் தெய்வம் முற்பட்டு மனிதரின் உதவியின்றி பலி எடுத்ததா கவும் அவ்வேளை வதனமார் முற்பட்டு அதற்குக் காவல் பார்த்ததாகவும் இதன் பின்னரேயே வதனமார் காவல் பண்ணும் முறை வந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனால் வதனமார்



விமானத்தில் உள்ள சிற்பம்

காவல் செய்யும் முறை இக் கோவிலுக்கேயுரிய தனித்துவமான முறையாகக் கொள்ளப்படுகின்றது.

**இரும்பு உடைத்த அற்புதம் :**

இவ்வாலயத்தில் தெய்வம் ஆடுபவர்களின் உண்மைத் தன்மையை பரிசோதிக்க விரும்பிய பறங்கி இனத்தைச் சேர்ந்த ஒருவர் யாருக்கும் தெரியாமல் உறுதிமிக்க இரும்புச் சூலம் ஒன்றைச் செய்து அதனை சுடலையில் புதை குழி ஒன்றின் மேல் குத்தி வைத்துவிட்டு தான் அப்படிச் செய்துள்ளமையை தெய்வக்காரர் கண்டுபிடிக்கின்றார்களா எனப் பார்ப்போம் என ஆலயத்தில் பூசை நடக்கும் போது வந்து நின்றுள்ளார். அப்போது தெய்வமாடிய தலைக்கட்டாடி குறித்த பறங்கி இனத்தைச் சேர்ந்தவரைத் தேடி வந்து அவரது வேண்டுகோளைக் கேட்டறிந்து அவரை சுடலைக்கு அழைத்துச் சென்று அங்கேயிருந்த இரும்புச்சூலத்தை எடுத்து வந்து ஆலயத்தைச் சுற்றி உடைத்துக் கொடுத்துள்ளார்,இச்சம்பவம் கந்தப்பர் என்பவர் தலைத்தெய்வக்காரராக ஆடியபோது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

**ஆலய வரலாறு கூறும் பாடல்கள் :**

இவ்வாலயத்தின் வரலாறு கூறும் வகையில் நரசிங்க வயிரவர் காவியத்திலும், மாரியம்மன் குளுர்த்திப் பாடல்களிலும் ஆங்காங்கே சில பதிவுகள் உள்ளன.

இந்த வகையில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வந்த வரலாறு கூறும் பாடலாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**"மேவவே எங்கெங்குமாகியே கைதடி விளங்கு மறவன்புலோ மேவு சில்லாலை**

**தாவுபுகழ் கற்குளம் ஞானியூர் எல்லைநகர் சகலதலமும் புகழும் புலோற்பளையும்**

**காவிலுயரும் புளியங்குளப் பதியிலும் கருணையுடனே இருந்தடியார் வினை தீர்த்து**

**மாவினந்தண்டலை அருத்த விடத்தல் முனை மருவும் நரசிங்க வயிரவ தம்பிரானே"**

இவ்வாலயத்தின் ஆரம்ப கர்த்தாவாகிய கந்தன் கதிராமர் பற்றியும், சின்னவியார் பற்றியும் கூறப்பட்டுள்ள பாடல்கள் பின்வருகின்றன.

"ஆளுமுன் கட்டாடி கதிராமனுக்கும் அவனிதனிலெதிராக வரும்பிணியகற்றி
நாளுமொரு தீவினைகள் வாராமலே உதவி நற்கிருபை வைத்துப் பாக்கியம் புரிந்தருள்வாய்"

"தாரணி புகழிலங்கை தாண்டவன் வெளிப்பதி தன்னில்வந்து அவதரித்த நங்கையரே
காரணியே கேள் கார் தேசமடங்கலையும் கற்பு நெறி உற்ற தவம் பெற்றவளே
சீரிலங்கு கட்டாடி சின்னவன் மனங்குளிர சென்ம துயர் கிலேசம் தீர்த்து விட்டு
பேரிலங்கு புளியநகர் பதியிலுனது சனம் பேரிலொரு துன்ப பிணி வாராமலே..."

## சடங்குப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி :

இவ்வாலயத்தின் பூசைகள் யாவும் சடங்கு முறையிலேயே நடத்தப்பட்டு வருகின்றன, சடங்கினை நடத்தும் பூசகர்களே தொடர்ச்சியாக இங்கு பூசை செய்து வருகின்றார்கள். கோவில் ஆகம முறையில் அமைக்கப்பட்டிருந்தாலும் சடங்கு முறையே இங்கு கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. அதாவது கந்தன் கதிராமர், சின்னவியார் ஆகியவர்களால் உருவாக்கப்பட்ட இவ்வாலயத்தின் பூசை முறைகள் யாவும் சடங்கு



ஆலய விமானத்தில் உள்ள சிற்பம்

முறையினை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஏடு படிக்கும் பாரம்பரியம் :**

வருடாந்தச் சடங்கு விழாக் காலத்தில் இவ்வாலயத்தில் இரவு வேளையில் அபிஷேகம் முடிந்ததும் மாரியம்மனுக்கு கும்பம் வைத்ததன் பின்னர் மாரியம்மனைத் துதித்து குளுர்த்திப் பாடல்கள் பாடப்படும் பாரம் பரியம் தொடரப்பட்டு வருகின்றது.


மூதாதையரான சின்னவியார் அவர்களால் பாடப்பட்ட பாடல்களே இங்கு பாடப்படுகின்றன. ஏறத்தாழ நான்கு மணி நேரங்களில் பாடி முடிக்கக் கூடிய பாடல்கள் பல்வேறு மெட்டுக்களில் அமைந்துள்ளன. உடுக்கிசையில் பக்தியுடன் பாடும் தேர்ச்சி பெற்றவர்கள் இதனை ஒவ்வொரு வருடமும் பாடி வருகின்றார்கள். இப்பாடல்களைப் பாடும் முறையினை ஏடு படித்தல் எனக்கூறுவர், ஏட்டுச் சுவடிக்கு மடை வைத்து பூசை செய்தே பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. ஏடு படித்தல் இவ்வாலயத்தின் தனித்துவங்களுள் ஒன்றாக அமைந்துள்ளன.

**சைவ, வைணவ, சாக்த நெறிகளின் சங்கமம் :**

தென்னாசிய சமயப் பாரம்பரியங்களில் சிவனை முதற்கடவுளாகக் கொண்ட சைவ நெறியும் விஸ்ணுவை முதற்கடவுளாகக் கொண்ட வைணவ நெறியும், சக்தியை முதற்கடவுளாகக் கொண்ட சாக்த நெறியும் மிகச் செல்வாக்குச் செலுத்துவதைக் காண முடியும். இம்மூன்று நெறிகளும் சரிசமமாக சங்கமிக்கும் இடமாக இவ்வாலயம் விளங்குவதாக விளக்க மளிக்கப்படுகின்றது.

அதாவது வைணபத்தின் விஸ்ணுவினுடைய நரசிம்ம அவதாரமும், சைவத்தின் சிவனுடைய சிங்கநாத அவதாரமும், வைரவ அவதாரங்களும் ஒன்றிணையும் மூர்த்தமாகவே இவ்வாலயத்தின் மூல மூர்த்தி அமைகின் றார். சிவனையும் விஸ்ணுவையும் ஒன்றிணைக்கும் ஒரேயொரு நரசிங்க வயிரவர் ஆலயமாக இவ்வாலயம் அமைந்துள்ளது. நரசிங்க வயிரவ வழிபாட்டின் கருவூலமாக இவ்வாலயம் விளங்குவது இதன் தனித்துவமாகும்.

நரசிங்க வயிரவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடும் இவ்வாலயத்தில் சரிசமமாக இடம்பெற்று வருகின்றது. பத்ததி முறையில் மடாலயமாக மாரியம்மனுக்கு கோவில் அமைக்கப்பட்டு முழுமையான மாரியம்மன் சடங்கு நடத்தப்படுகின்றது. மாரியம்மனுக்கு சர்க்கரை யமுது படைத்து குளுர்த்தியாடும் பாரம்பரியம் தொடரப் படுகின்றது.


விமானத்தில் உள்ள சிற்பம்

பெண்ணும் ஆணும் சரிசமமாக அமையும் பேருண்மை இவ் வாலயத்தின் வழிபாட்டுத் தத்துவத்தினூடாக உணர்த்தப்படுகின்றது. அதாவது மாரியம்மன், நரசிங்க வயிரவர் ஆகிய தெய்வங்களுக்கு சரிசமமாக இடம்பெறும் சடங்குகள் இவற்றை உணர்த்துகின்றன என்பர்.

## தெளிவுச் சடங்கின் தனித்துவம் :

வருடாந்தச் சடங்கு விழா நிறைவடைந்ததை அடுத்து மூன்றாம் நாளாக அமையும் ஞாயிற்றுக்கிழமை தெளிவுச்சடங்கு நடத்தப்படும். இதனைப் பூச்சடங்கு எனவும் கூறுவர். இவ்வாலய பூச்சடங்கில் காணப்படும் தனித்துவம் யாதெனில் அன்றைய தினமும் தெய்வமாடி சடங்கு நடத்துவதாகும். விசேடமாக இச்சடங்கில் சிலம்பு அணியாமல் தெய்வங்கள் ஆடப்படும்.

தெய்வங்கள் வருடாந்தச் சடங்கு விழாவில் இடம்பெற்ற நிறை குறைகளை இச்சடங்கின் போது கூறுவதுடன், சடங்கு விழாவில் கடமைகள் செய்த பக்தர்களுக்கு திருவாக்குகளும் கூறுவர்.இத்துடன் விசேடமாக இச்சடங்கன்று தெய்வமாடுவோர் தாம் இவ்வாலயத்தைத் தவிர வேறு எங்கும் தலை சுற்றமாட்டோம் எனவும், எந்தக் கப்புகனிடமும் செல்ல மாட்டோம் எனவும் ஆலய பிரதம பூசகரிடம் தாரை வார்த்துச் சத்தியம் செய்யும் செயலும் மேற்கொள்ளப்படும்.

## ஆலய நிருவாக சபையினரின் விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | **திரு. சீ.நவநேசராசா** |
| பொருளாளர் | - | **திரு. க.கலாமோகன்** |
| செயலாளர் | - | **திரு. து.கௌரீஸ்வரன்** |
| இணைத்தலைவர் | - | **திரு. சி.நற்குணசிங்கம்** |
| உப தலைவர் | - | **திரு. நா.அமிர்தநாயகம்** |
| உப பொருளாளர் | - | **திரு. து.சோதீஸ்வரன்** |
| உப செயலாளர் | - | **திரு. பொ.ரமணபால்** |

## நிருவாக உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **திரு. செ. மகேஸ்வரம்** | - | கோட்டைமுனை |
| **திரு. சி. விஜேந்திரன்** | - | சீலாமுனை |
| **திரு. ப.சுதாகரன்** | - | சீலாமுனை |
| **திரு. அ.சுதர்சன** | - | சீலாமுனை |
| **திரு. யோ.லிபன்ராஜ்** | - | மாமாங்கம் |
| **திரு. க.கருணாநிதி** | - | உப்போடை |

## கணக்குப் பரிசோதகர்

**திரு. ஜீ.நாகராஜா**

## போஷகர்

**திரு. மு.நவரெட்ணம்**

## ஆலய தெய்வக்காரர்கள் விபரம்

திரு. தி. மதியழகன் — தலைமைத் தெய்வக்காரர்

திரு. மு.நவரெட்ணம்

திரு. ரி.ஜெயம்

திரு. க.கருணாநிதி

திரு. து.சந்திரகுமார்

திரு. ரி.கலைவாணன்

திரு. ந.சடாட்சர சண்முகதாஸ்

திரு. வி.சுரேஸ்குமார்

திரு. நா.சிவராசா

திரு. சி.சிவாகரன்


திரு. சி.சிவகுமார்

திரு. ஜெ.குணசீலன்



எண்ணெய்க் காப்பு நிகழ்வின்போது ....

# ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலயத்தின் தல வரலாறு கூறும் கந்தன் கதிராமரின் சிற்பம்



ஒவ்வொரு ஆலயத்திலும் சிற்பங்கள் அமைக்கப்படும் போது அவ்வாலயத்தின் தல வரலாற்றினைப் பிரதிபலிக்கும் சிற்பங்களை அமைப்பது வழமை. இதற்கிணங்க ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி ஆலயத்தில் 2009-2012 வரை இடம்பெற்ற புனருத்தாரண வேலைகளின் போது முன் மண்டபத்தில் நரசிம்மர் சிற்பத்தின் அருகிலே இடப்பக்கமாக இவ்வாலயத்தின் ஆரம்ப கர்த்தாவான கந்தன் கதிராமருடைய சிற்பம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு, எல்லை வீதி

# அருள்மிகு ஸ்ரீ மஹா நரசிங்க வைரவர் ஆலய

## புனராவர்த்தன பிரதிஸ்டா அஸ்டபந்தன ஏககுண்ட பசஷ மகா கும்பாவிஷேக பெரும் சாந்திப் பெருவிழா விஞ்ஞாபனம்.



| ஆரம்பம்<br>**31.05.2012**<br>*வியாழக்கிழமை* | எண்ணெய்க்காப்பு<br>**01.06.2012**<br>*வெள்ளிக்கிழமை* |
|---|---|
| கும்பாவிஷேகம்<br>**02.06.2012**<br>*சனிக்கிழமை* | சங்காபிஷேகம்<br>**26.06.2012**<br>*செவ்வாய்க்கிழமை* |



"கரகலித கபால குண்டலீ தண்டபாணி
தருண திமிர நீல வியாழ யஞ்ஞோபவீதகா
கிருது சமய சபர்யோ விக்ன விச்சோசதச்சோ
ஜயது வடுக நாத நரசிங்க பைரவ சித்தித
சாதகாணாம்"

**நரசிங்க வைரவப் பெருமான் பக்த அடியார்களே !**

சகல செல்வமும் பொலிந்து சிறந்த சிவ பூஜை ஸ்தானங்களை நாற்றிசையும் பெற்று விளங்குவதும், சைவ மத அனுஸ்டானங்களைத் தன்னகத்தே பொருந் தியதும், அருளாளர்களாகிய திருஞான சம்பந்தப் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரால் பாடப்பெற்ற ஸ்ரீ தட்சண கைலாசமென போற்றப்படுவது மாகிய ஸ்ரீ லங்கா புரியின் கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு எல்லை வீதியில் வரலாற்றுத் தொன்மையும், தனித்துவமும் பெற்று சகல ஆன்ம கோடிகளிற்கும் அருள் பாலித்து கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சர்வ அனுக்கிரக மூர்த்தியான ஸ்ரீ மகா நரசிங்க வைரவப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளாக அமைந்த விநாயகர், நாக தம்பிரான், சூமலி, பலிபீடம் மற்றும் சுந்தர விமானங்களிற்கும் நிகழும் சர்வ மங்கள கரமான நந்தன வருஷம் வைகாசி மாதம் **இருபதாம் நாள் (02.06.2012) சனிக்கிழமை** திரயோதசி திதியும், சுவாதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் **காலை 07 மணி தொடக்கம் 08 மணி 30 நிமிடம்** வரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில் புனராவர்த்தன அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

இப் பெரும் சாந்திப் பெரு விழாவில் மெய்யடியார் கள் யாவரும் ஆசார சீலராக வருகை தந்து தரிசித்து ஸ்ரீ மகா நரசிங்க வைரவப் பெருமான் கிருபா கடாட்சத் தைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

## வைகாசி 18 ஆம் நாள் (31.05.2012) வியாழக்கிழமை

அதிகாலை கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, அநுக்ஞை, திரவிய விவாகம், திரவிய சுத்தி, கணபதி கோமம், கிராம சாந்தி, பிரவேசபலி, நவக்கிரக கோமம், ரசேஷாகண கோமம், மூர்த்தி கோமம், திசா கோமம், வாஸ்து சாந்தி, யந்திர பூஜை ,கோ பூஜை, கங்கா பூஜை, சூர்யாக்னி முதலியன.

மாலை 04 மணியளவில் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ஆச்சார்ய ரக்ஷாபந்தனம், யந்திர பூஜை, பிரசன்ன அபிசேகம், பிரசன்னபூஜை, கடஸ்தாபனம், கலாகர்சனம், க்ஷணகோமம், கும்பயாகசால பிரவேசம்,யாகபூஜை, அக்னிவிபாசணம், வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், தூபிஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஸ்டபந்தனம், விபூதி பிரசாதம் வழங்கல்.

## வைகாசி 19 ஆம் நாள் (01.06.2012) வெள்ளிக்கிழமை

காலை 07 மணியளவில் புண்ணியா வாசனம்,விசேட சந்தி,தைலாப்பியங்கம்,யாக பூஜை, திரவிய கோமம், வேத ஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 04 மணியளவில் புண்ணியா வாசனம், விசேட பஞ்ச கவ்விய பூஜை,விம்ப சுத்தி, விம்ப ரக்ஷா பந்தனம், யாக பூஜை, கோமம், பூர்வ பட்சிம சந்தானம், வேத ஸதோத்திர பாராயணம், திருமுறைப் பாராயணம், குருமார் உபசாரம், விபூதி பிரசாதம் வழங்கல்.

## வைகாசி 20 ஆம் நாள் [02.06.2012] சனிக்கிழமை

அதிகாலை 06 மணிக்கு புண்ணியா வாசனம், மகா பூரணாகுதி, விசேட தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம், அந்தர் பலி, பகிர் பலி, யாத்திரா தானங்கள், சர்வ மங்கள வாத்திய சகிதம் கும்பம் வீதி வலம் வருதல், ஸ்தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம், பிரதம குரு ஆசியுரை, விபூதி பிரசாதம் வழங்கல்.

**01.06.2012 வெள்ளிக்கிழமை காலை 8:00 மணி முதல் மாலை 3:00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.**

**பிரதிஸ்டா பிரதம குரு :**
சிவாச்சார்ய குருமணி சிவாகம கிரியா தத்துவநிதி ஈசான சிவாச்சார்யார் **சிவப் பிரம்ம ஸ்ரீ இரங்க வரதராஜ சிவாச்சாரியார்,** பிரதம குரு - ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயம் அமிர்தகளி, மட்டக்களப்பு.

**யாக சம்ரட்சகர்கள்**
இளம் யாக விபூசணம் **பிரம்ம ஸ்ரீ வரத அரவிந் சர்மா**
இளம் சூடாமணி **பிரம்ம ஸ்ரீ வரத ஸ்ரீ வக்ஷல சர்மா** - ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயம், அமிர்தகளி, மட்டக்களப்பு.
**பிரம்ம ஸ்ரீ சாமி சதாகரக் குருக்கள் அகோர சிவாச்சாரியார்,** மட்டக்களப்பு.

ஈசான சிவாச்சார்யார், இளம் ஆகம சூடாமணி **பிரம்ம ஸ்ரீ சந்திர சேகர சாந்த ரூப சிவாச்சாரியார்,** கோப்பாய்.

**சர்வ சாதகம்**
சாதக மணி, வேதஸ்தோத்திர ராகப் பிரியன் **பிரம்ம ஸ்ரீ வெங்கட கஜராஜ சர்மா,** காளி கோயில், வட்டுக்கோட்டை.
சர்வ சாதக சூடாமணி, இளம் ராக வேந்தன் **பிரம்ம ஸ்ரீ வரத தீபன் சர்மா,** ஸ்ரீ பத்திர காளி கோவில, திருகோணமலை.

**ஆலய குரு**

பூசகர் செ. தயாநிதி

**கட்டிட நிர்மாண வேலைகள்**

ஸ்தபதி திரு.க.ரமேஸ்குமார் குழுவினர், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

**சிற்ப வேலைகள்**

திரு.ராஜா ராம் குழுவினர், தமிழ் நாடு, இந்தியா.

**வர்ண வேலைகள்**

திரு.ஸ்ரீ.சஞ்ஜிவ குழுவினர், இருதயபுரம், மட்டக்களப்பு.

## மண்டலாபிஷேக பூசை உபயகாரர் விபரம்


| | | |
|---|---|---|
| **02.06.2012** | – | **திரு.எஸ். அரசலிங்கம் குடும்பம், பாரதி வீதி, மட்டக்களப்பு** |
| **03.06.2012** | – | **திரு.எஸ். சேனாதிராஜா குடும்பம், எல்லை வீதி, மட்டக்களப்பு** |
| **04.06.2012** | – | **திரு.எஸ்.துரைசிங்கம் குடும்பம், எல்லை வீதி, மட்டக்களப்பு** |
| **05.06.2012** | – | **திரு.த.நடேசப்பிள்ளை குடும்பம், மாமாங்கம், மட்டக்களப்பு** |
| **06.06.2012** | – | **திரு இரா.பவளசிங்கம் குடும்பம், பெயிலி குறுக்கு, மட்டக்களப்பு** |
| **07.06.2012** | – | **திரு.எஸ்.அருள் குடும்பம், அருள் ஸ்டோர்ஸ், எல்லை வீதி, மட்டக்களப்பு** |
| **08.06.2012** | – | **திரு.எஸ். விநாயகமூர்த்தி குடும்பம், எஸ். இராமசிவம் குடும்பம். பாரதி வீதி, மட்டக்களப்பு** |
| **09.06.2012** | – | **திரு.மு. நவரெட்ணம் குடும்பம், மாமாங்கம், மட்டக்களப்பு** |
| **10.06.2012** | – | **திரு.எஸ்.பாலசுப்பிரமணியம் குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு** |
| **11.06.2012** | – | **திரு.க.சக்திதாஸ் குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு** |
| **12.06.2012** | – | **திரு. மு. சின்னத்தம்பி குடும்பம், கூளாவடி, மட்டக்களப்பு** |
| **13.06.2012** | – | **திரு.எஸ்.சீனித்தம்பி குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு** |

| | | |
|---|---|---|
| 14.06.2012 | – | திரு.பா.பொன்னுத்துரை வைத்தியர் குடும்பம், தாண்டவன்வெளி, மட்டக்களப்பு |
| 15.06.2012 | – | திரு.எஸ்.சிவகுமார் குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு |
| 16.06.2012 | – | திரு.எஸ்.சிவராசா குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு |
| 17.06.2012 | – | திரு.எஸ்.தயாபரன் குடும்பம், எல்லை வீதி, மட்டக்களப்பு |
| 18.06.2012 | – | திரு.எஸ். அருச்சுனராஜா குடும்பம், (திசவீரசிங்கம் சதுக்கம்) திரு. கே. தயாசிங்கம் குடும்பம். (சின்ன உப்போடை) |
| 19.06.2012 | – | திரு.சீ.நவநேசராசா குடும்பம், மாமாங்கம், மட்டக்களப்பு |
| 20.06.2012 | – | திருமதி.சந்திரா துரைராஜா, திரு.இ.கலைவாணன், திரு.க.இராமலிங்கம், திரு.சி.விஜேந்திரன், திரு.எஸ்.மகாலிங்கம் குடும்பம், சீலாமுனை, மட்டக்களப்பு |
| 21.06.2012 | – | திருமதி.எஸ்.சொர்ணம்மா, திரு.செ.தயாநிதி குடும்பம் சீலாமுனை, மட்டக்களப்பு |
| 22.06.2012 | – | திரு.எஸ்.பாக்கியராசா குடும்பம், புதிய வீதி, மட்டக்களப்பு |
| 23.06.2012 | – | ஏறாவூர் வாழ் ஆலய சடங்கு உபயகாரர்கள். |
| 24.06.2012 | – | திரு.எஸ். கிருபாகரன் குடும்பம் (வவுனியா) |
| 25.06.2012 | – | திரு.த.கணேசன் குடும்பம், கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு |
| 26.06.2012 | – | திரு.எஸ். ராஜா குடும்பம், டிஸ்னி காட்வெயார் ஸ்ரோர்ஸ், தாண்டவன்வெளி, மட்டக்களப்பு. |

**மங்கள வாத்தியம்** திரு.இ. காளிதாஸ் குழுவினர், மட்டக்களப்பு.


**பிரசுரம் அன்பளிப்பு** திரு.சீ. நவநேசராசா குடும்பம், மாமாங்கம், மட்டக்களப்பு.

## மூலஸ்தான அடிக்கல் நாட்டும் விழாவின் போது ...





















கும்பாபிஷேக தினத்தன்று கட்டிட ஆசாரியார், வர்ணம் பூசியவர் கௌரவிக்கப்பட்டபோது....


நரசிங்க வயிரவ வழிபாட்டின் கருவூலமாக விளங்கும் எல்லை வீதி ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமியின் பேரருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.



மட்டக்களப்பில் முன்னணியில் உள்ளதும் பலரதும் நம்பிக்கையை பெற்றுள்ளதுமான கட்டிடப் பொருள் விற்பனை ஸ்தாபனம்




டிஸ்னி காட்வெயார் ஸ்டோர்ஸ்




திருமலை வீதி,
தாண்டவன் வெளி,
மட்டக்களப்பு.

விசேட வைபவங்களுக்கான வீடியோ மற்றும் புகைப்பட சேவைகளுக்கு

கார்த்தீ ஸ்டூடியோ





137/19 இரண்டாம் குறுக்கு
புன்னைச்சோலை, மட்டக்களப்பு.
தொ.பே : 0774812166, 0715420558